**செய்தி வெளியீடு எண்: 873** **நாள்: 03.12.2018**

**இன்று (3.12.2018), சென்னை, பெருங்குடியில் நடைபெற்ற GEM மருத்துவமனை திறப்பு விழாவில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை**

இந்த இனிய நிகழ்ச்சியிலே கலந்துகொண்டு சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற,

இந்நிகழ்ச்சியை துவக்கி வைத்த
**மாண்புமிகு குடியரசு துணைத் தலைவர்**
**திரு.வெங்கைய்யா நாயுடு அவர்களே!**

மாண்புமிகு துணை முதலமைச்சர்
**அண்ணன் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்களே!**

மாண்புமிகு மீன்வளம்,
பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர்
**அண்ணன் திரு. டி. ஜெயகுமார் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றுக் கொண்டிருக்கின்ற
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்
**சகோதரர் திரு.எம்.ஆர்.விஜயபாஸ்கர் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற பாரத ஜனதா கட்சியினுடைய மாநிலச் தலைவர் **டாக்டர். தமிழிசை சௌந்தரராஜன் அவர்களே!**

ஜெம் மருத்துவமனையின் தலைமை நிர்வாகி
**மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய**
**டாக்டர் சி.பழனிவேலு அவர்களே!**
இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

மரியாதைக்குரிய வானதி சீனிவாசன் அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!

இம்மருத்துவமனையினுடைய நிர்வாகிகளே!

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்றிருக்கின்ற
மருத்துவர்களே!

பெரியோர்களே! தாய்மார்களே!
தொழில் அதிபர்களே!
நண்பர்களே!
மற்றும்
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே!

உங்கள் அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவையில் உள்ள ஜெம் மருத்துவமனை நிர்வாகம் சென்னை மற்றும் சுற்றுப்புற மாவட்ட மக்களின் நலனுக்காக சென்னையிலும் ஜெம் மருத்துவமனையை துவக்கும் இந்த

நிகழ்ச்சியில் கலந்து கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவிலேயே இரைப்பை மற்றும் குடல் சார்ந்த நோய்கள் மற்றும் குடல் இறக்க நோய்க்கான லேப்பிராஸ்கோப்பி அறுவை சிகிச்சை மையத்தை ஜெம் மருத்துவமனை என்ற பெயரில் முதன் முதலில் கோவையில் துவக்கியவர் டாக்டர் திரு.சி.பழனிவேலு அவர்கள். லேப்ராஸ்கோபிக் முறையினால் நோயாளிகள் மருத்துவமனையிலும், பின்னர் வீட்டிலும் நீண்ட நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டிய சூழ்நிலையை தவிர்த்து, வெகு விரைவிலேயே தங்கள் அன்றாட பணிகளுக்கு திரும்ப முடியும். அதேபோல் கடந்த 2001–ஆம் ஆண்டு தென்னிந்தியாவிலேயே முதல் முறையாக லேப்ராஸ்கோப் அறுவை சிகிச்சை முறையையும் அறிமுகப்படுத்தியவர் டாக்டர் சி.பழனிவேலு அவர்கள். சிறுநீரகம் உட்பட அனைத்து சிறப்பு மருத்துவத்திற்கான சிகிச்சையையும் லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சை மூலம் மேற்கொண்ட இந்தியாவின் முதல் மருத்துவமனை இது தான் என்பதும், 3D, 4K மற்றும் ரோபோடிக் போன்ற நவீன முறையிலான லேப்ரோஸ்கோபிக் அறுவை சிகிச்சையும் இம்மருத்துவமனையில் மேற்கொள்ளப்படுகிறது என்பதையும்

அறிய முடிகிறது. மேலும், மருத்துவ ஆராய்ச்சிப் படிப்புக்கும் இம்மருத்துவமனை ஒரு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேலும், தென்னிந்தியாவில் முதல் முறையாக லேப்ராஸ்கோப்பி முறையில் கல்லீரல் தான அறுவை சிகிச்சை செய்து ஜெம் மருத்துவமனை சாதனை படைத்தது பாராட்டுக்குரியதாகும்.

இங்கிலாந்து, அமெரிக்கா, கொரியா, சீனா உள்ளிட்ட நாடுகளில் லேப்ராஸ்கோபிக் சிகிச்சையை செய்து காண்பித்ததோடு, அதனை கற்றுக் கொடுக்கும் முதல் இந்தியர் என்ற பெருமையையும் பெற்றவர் டாக்டர் திரு.சி.பழனிவேலு அவர்கள். இவர் தனது ஆராய்ச்சிப் படிப்பினை இங்கிலாந்து நாட்டில் உள்ள கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் முடித்தார். 2005 ஆம் ஆண்டு, லேப்ராஸ்கோபிக் அறுவை சிகிச்சைகளை சிறப்பாக செய்தமைக்காக, இந்தியாவின் மிக உயரிய விருதான டாக்டர் பி.சி.ராய் விருது இவருக்கு வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. மீண்டும் 2015 ஆம் ஆண்டு 'Eminent Medical Person' என்ற பிரிவின் கீழ் இவருக்கு டாக்டர் பி.சி.ராய் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இந்தப் பிரிவின் கீழ் தென்னிந்தியாவில் விருது பெற்ற நான்கு மருத்துவர்களின் இவரும் ஒருவர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

‘‘**சமூக பொருளாதார பின்னணி எதுவாக இருந்தாலும், அதனைக் கருத்தில் கொள்ளாமல், மாநிலத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் மருத்துவ சிகிச்சை தொடர்பான அனைத்து நடைமுறைகள், தொழில் நுட்பங்கள், மருத்துவத் திறன் செயல்பாடுகள் ஆகியவற்றை கிடைக்கச் செய்வதே எனது நோக்கம் ஆகும்’’ என்றார் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.**

இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் மாண்புமிகு அம்மாவின் அரசும் தமிழ்நாட்டு மக்களின் உடல் நலனுக்கு எப்பொழுதும் முன்னுரிமை அளித்து வருகிறது. ‘‘**நலமான மாநிலமே, வளமான மாநிலமாகும்.**’’ சிறந்த மனித வளம் தான் ஒரு நாட்டின் மேம்பாட்டிற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படை ஆகும். அந்த வகையில், மகப்பேறு மற்றும் குழந்தை நலத்திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்துவதினால் தான், IMR மற்றும் MMRஐ குறைப்பதிலும், பிற சுகாதார குறியீடுகளிலும் தமிழ்நாடு ஒரு முன்னோடி மாநிலமாக திகழ்கிறது என்பதை இங்கே பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சீரான சுகாதார பாதுகாப்பு அளிப்பதை உறுதி செய்யும் நோக்கில் முன்னோடி செயல் திட்டங்களை மாண்புமிகு

அம்மா அவர்களாலும், மாண்புமிகு அம்மாவின் அரசாலும் செயல்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

❖ தமிழ்நாடு மருத்துவ பணிகள் கழகம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைக்குழு ஆகியவை சிறந்த மருத்துவ சேவையை அளித்து வருகிறது. மேலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டம், வளர் இளம் பெண்களுக்கான சுகாதாரத் திட்டம், பிரசவ உடனாளர் திட்டம், அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம், அம்மா ஆரோக்கியத் திட்டம், அம்மா முழு உடல் பரிசோதனை, அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம், அம்மா மருந்தகம் போன்ற பல முன்னோடி திட்டங்களையும் முதன் முதலாக செயல்படுத்திய பெருமை தமிழ்நாட்டிற்கு உள்ளது.

❖ இறந்தவர்களின் உடல் உறுப்புகளைக் கொண்டு உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்வதில் மிகச் சிறப்பாக செயல்படுவதில் நாட்டிலேயே முதன்மை மாநிலத்திற்காக மத்திய அரசின் விருதை தமிழ்நாடு தொடர்ந்து நான்கு ஆண்டுகளாக பெற்று வருகிறது.

- ❖ தமிழ்நாடு அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறையின் வெகு சிறப்பான செயல்பாட்டின் மூலம் குழந்தை இறப்பு விகிதம், தாய்மார்கள் இறப்பு விகிதம் மற்றும் மொத்த கருவள விகிதம் போன்ற சுகாதார குறியீடுகளில் தமிழ்நாடு சிறந்த சாதனையை படைத்துள்ளது. நிலையான வளர்ச்சி இலக்குகளின் கீழ், தாய்மார்கள் இறப்பு விகிதத்தில் 2030ஆம் ஆண்டுக்குள் அடைய வேண்டிய இலக்கினை 2016 ஆம் ஆண்டுக்குள் அடைந்த இந்தியாவின் மூன்று மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும்.
- ❖ கடந்த 7 ஆண்டுகளில் 254 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் 221 கோடியே 30 லட்சம் ரூபாய் செலவில் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
- ❖ இதுதவிர 165 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி, ஸ்கேன் போன்ற வசதிகளுடன் 190 கோடியே 37 லட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்பட்டுள்ளன.
- ❖ அரசு மருத்துவமனைகளில் சிறந்த தூய்மை பாராமரிப்பிற்காக கடலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, அரசு தலைமை மருத்துவமனை, மணப்பாறை, அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம், முகையூர்

ஆகிய 4 அரசு மருத்துவ நிலையங்களுக்கு மத்திய அரசின் காயகல்ப் விருதிற்கான கேடயமும், பாராட்டு சான்றிதழ் மற்றும் 1 கோடி ரூபாய்க்கான காசோலையும் வழங்கப்பட்டுள்ளன.

- ❖ அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக 1035 கோடி ரூபாயும், பல்வேறு உபகரணங்களுக்காக 376 கோடி ரூபாயும், மாவட்ட மற்றும் துணை மாவட்ட அரசு மருத்துவமனைகளின் உட்கட்டமைப்புக்காக 174 கோடியே 68 லட்சம் ரூபாயும், உபகரணங்களுக்காக 82 கோடியே 41 லட்சம் ரூபாயும் மாண்புமிகு அம்மாவின் அரசு இதுவரை வழங்கியுள்ளது.
- ❖ அரசு மருத்துவ நிலையங்களின் உட்கட்டமைப்புக்காக ஆயிரத்து 630 கோடியே 40 லட்சம் ரூபாயும், மருத்துவக் கல்லூரிகளுக்காக 722 கோடியே 26 லட்சம் ரூபாயும் தேசிய நலவாழ்வு குழுமம் வழங்கியுள்ளது.
- ❖ ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதார திட்டத்தின் கீழ் ஆயிரத்து 634 கோடி ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு மற்றும் உயர் தொழில்நுட்ப மருத்துவக்

கருவிகளுடன் நகர்ப்புற ஏழை மக்களின் பயன்பாட்டிற்காக 11 அரசு மருத்துவ மனைகள் மற்றும் மாவட்ட அளவிலான மருத்துவமனைகள் மேம்படுத்தப்பட உள்ளன.

❖ அரசு மருத்துவமனைகளில் எம்.ஆர்.ஐ.ஸ்கேன், சி.டி.ஸ்கேன் – போன்ற பல புதிய நவீன உபகரணங்களை நிர்மாணிக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

❖ மாண்புமிகு அம்மா அவர்களாலும், அதன் தொடர்ச்சியாக மாண்புமிகு அம்மாவின் அரசாலும் மேற்கொள்ளப்பட்ட இடைவிடாத முயற்சியின் காரணமாக மதுரை மாவட்டம் தோப்பூரில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் செலவில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்கப்பட உள்ளது.

❖ கரூரில் ஒரு புதிய அரசு மருத்துவக் கல்லூரியும், விருதுநகரில் ஒரு புதிய பல் மருத்துவக் கல்லூரியும் தொடங்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

❖ உலகத் தரம் வாய்ந்த சர்வதேச யோகா மற்றும் இயற்கை மருத்துவ அறிவியல் மையம் செங்கல்பட்டிலுள்ள அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்தில் 50 ஏக்கர் நிலப்பரப்பில் 60 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட உள்ளது.

- ❖ முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் ஆண்டு ஒன்றுக்கு குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த காப்பீட்டுத் தொகை **2** லட்சம் ரூபாயிலிருந்து **5** லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- ❖ உயர்தர மருத்துவ சேவைகளை வழங்குவதில் மட்டுமல்லாது, மிகச் சிறந்த மனித வளம் மற்றும் கட்டமைப்பை ஏற்படுத்தித் தருவதிலும், தமிழ்நாடு இந்தியாவிலேயே ஒரு முன்மாதிரி மாநிலமாக திகழ்ந்து வருகிற காரணத்தால், தமிழ்நாடு இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக விளங்குகிறது.

ஜெம் மருத்துவமனையில் வசதியான அறுவை சிகிச்சை அரங்கங்களும், தீவிர சிகிச்சை பிரிவும், அனைத்து நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக கணையத்தில் புற்றுநோய் என்பது சிகிச்சைக்கு மிகவும் சிக்கலான ஒன்றாக கருதப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்ட சிக்கலான அறுவை சிகிச்சையை மரியாதைக்குரிய டாக்டர் திரு.பழனிவேலு அவர்கள் தன்னுடைய தனிப்பட்ட ஆற்றலினால், உலகிலேயே முதன்முறையாக லேப்ரோஸ்கோபிக் முறை மூலம் வெற்றிகரமாக செய்த பெருமைக்குரியவர். சர்வதேச அறுவை சிகிச்சைக்கான

ஒலிம்பிக்ஸில் வெள்ளிப் பதக்கம் பெற்றவர் மரியாதைக்குரிய டாக்டர் திரு.பழனிவேலு அவர்கள். இது மட்டுமன்றி, சர்வதேச அளவில் 25 விருதுகளுக்கு மேல் பெற்ற சிறப்புக்குரியவர். சர்வதேச அளவில் "திரு.பழனிவேலுவின் உணவுக் குழாய் புற்றுநோய் அறுவை சிகிச்சை" என்று மருத்துவ தொழில்நுட்பத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது இவரது தனிச் சிறப்பைக் காட்டுகிறது. இவரால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருப்பதாக அறிகிறேன்.

எனவேதான் தங்களுடைய உயிரை பாடுபட்டு காப்பாற்றும் மருத்துவர்களை தெய்வத்திற்கு இணையாக மக்கள் போற்றுகிறார்கள்.

"**என் கடன் பணிசெய்து கிடப்பதே**'' என்ற ஆன்றோர் வாக்கிற்கு ஏற்ப மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும். ''**கடமையைச் செய் பலனை எதிர்பார்க்காதே**''என்று பகவான் கிருஷ்ணர் பகவத்கீதையில் கூறினார். ''**செய்யும் செயலுக்கு உரிய வெகுமதி கண்டிப்பாக கிடைக்கும்**'' என்றனர் நமது ஆன்றோர் பெருமக்கள். எனவே பலனை எதிர்பாராமல் கடமையைச் செய்பவர்களுக்கு உரிய பலன் நிச்சயம் கிடைக்கும். இதுகுறித்த நிகழ்வு ஒன்றினை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கிலாந்து நாட்டு கிராமம் ஒன்றில் ஃபிளெமிங் என்ற ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு நாள் நிலத்தில் வேலை செய்யச் செல்லும்போது, ஒரு சிறுவன் புதை குழியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ள போராடிக் கொண்டிருந்தான். காப்பாற்றுங்கள் எனக் கத்திக் கொண்டிருந்தான். இதைப்பார்த்த ஃபிளெமிங் உடனே மிகவும் கஷ்டப்பட்டு போராடி அந்த சிறுவனை புதைகுழியில் இருந்து காப்பாற்றினான்.

மறு நாள் அவனது வீட்டிற்கு அந்த பையனின் தந்தை வந்தார். அவர் ஒரு பெரிய செல்வந்தர். வந்த அவர் அந்த விவசாயியிடம், "உனக்கு என்ன வேண்டும்", என்று கேட்டார். அதற்கு அந்த விவசாயி, "அது எனது கடமை, வெகுமதி எதுவும் வேண்டாம்", என்றான். உடனே அங்கிருந்த அந்த விவசாயியின் மகனைப் பார்த்த செல்வந்தர், "இவன் நல்ல கல்வி பெற ஏற்பாடு செய்கிறேன்", என்று ஃபிளெமிங்கின் மகனை தன்னுடன் அழைத்துச் சென்றார். அவரது உதவியால் படித்துப் பட்டங்கள் பெற்று, மருத்துவத் துறையில் பெரும் சாதனை செய்தான் அந்த விவசாயி மகன். ஆம். சிறு காயம் முதல் இதய நோய்வரை உடல் உபாதைகள் பலவற்றுக்கு அருமருந்தான பென்சிலின் என்ற ஆன்டிபயாடிக் மருந்தைக்

கண்டுபிடித்து மனித குலத்துக்கு சேவை செய்த அலெக்சாண்டர் ஃபிளெமிங்தான் அந்த சிறுவன்.

இவரது தந்தையால் காப்பாற்றப்பட்ட அந்த செல்வந்தரின் மகன் பல ஆண்டுகளுக்குப் பின் நிமோனியா நோயால் பாதிக்கப்பட்டபோது அந்த பென்சிலின் மருந்தே அவனைக் காப்பாற்றியது. அப்படி காப்பாற்றப்பட்ட சிறுவன் யார் தெரியுமா? **2**ஆம் உலகப்போரில் ஹிட்லரை வீழ்த்துவதில் பெரும் பங்குவகித்த இங்கிலாந்தின் புகழ்பெற்ற பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில்தான் அவர்.

எந்தவிதமான பிரதிபலனையும் எதிர்பார்க்காமல், ஒரு ஏழை விவசாயி உயிருக்குப் போராடிய ஒரு சிறுவனை காப்பாற்றிய செயலுக்கான பலன், அவனது மகன் ஒரு செல்வந்தரின் உதவியால் உலகம் போற்றும் மருத்துவராக உயர்ந்தான். அதுமட்டுமின்றி, அந்த மருத்துவர் கண்டு பிடித்த பென்சிலின் என்ற மருந்தினால், உலக மக்கள் பயனடைந்தனர். அதேபோல், ஏழை விவாசாயி மகனை நன்கு படிக்க வைத்த செயலுக்கான பலன், அந்த செல்வந்தரின் மகன் உயிர் காப்பாற்றப்பட்டு, நாட்டிற்கே பிரதமர் ஆனார்.

## உற்றான் அளவும், பிணியளவும், காலமும்

**கற்றான் கருதிச் செயல்**

என்றார் வள்ளுவர் பெருமான். அதாவது நோயுற்றவனின் வயது, நோயின் அளவு மற்றும் உடலில் எவ்வளவு நாளாக நோய் உள்ளது ஆகியவற்றை ஆராய்ந்து அறிந்து, தகுந்த முறையில் மருத்துவம் செய்ய வேண்டும்.

சென்னை பெருங்குடியில் இன்று துவக்கப்பட்டுள்ள உங்கள் மருத்துவமனையின் பணி, வள்ளுவர் பெருமான் கூற்றுக்கு ஏற்ப அமைய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். ஏழை, பணக்காரர் வித்தியாசம் பார்க்காமல் அனைவருக்கும் தரமான மருத்துவ சேவையை வழங்க வேண்டும் என்பதை கடமையாகக் கொண்டு செயல்பட வேண்டும். இவ்வாறான சேவையின் மூலம் இந்த மருத்துவமனை வருங்காலத்தில் நல்லமுறையில் வளர்ந்து உலகம் போற்றும் மருத்துவமனையாக திகழ வேண்டும் என வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**